இப்பொழுதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களது குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க, கள்ளக்குறிச்சி, சின்ன சேலத்திற்கென்று ஒரு ஸ்கீம் போடப்பட்டது. மீண்டும் அதை வலியுறுத்தி அப்பகுதிக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்தவர்கள். காங்கிரஸ் கட்சியைப் பார்த்து, சொந்தக் காலில் நிற்கிறீர்களா என்றும் மைய அரசைப் பார்த்து குறையும் சொன்னார்கள். அவர்கள் மைய அரசின் ஆட்சியிலே நிர்வாகம் சரியில்லையென்று சொன்னார்கள். ஆனால் அவர்கள்தான் கேரளாவிலே முன்னால் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள். அங்கே ஊழல் நடைபெற வில்லையா? அங்கே மருத்துவக் கல்லூரியிலே அனுமதிப்பதற்கு சீரோ மார்க் வாங்கியவர்களுக்கு பாஸ் போட்டிருக்றார்கள். கோர்ட்டுக்குச் சென்ற பிறகு அவற்றை ரத்து செய்துவிட்டு மீண்டும் எம்.பி.பி.எஸ். தேர்வை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே மத்திய அரசை வேண்டுமென்றே குறை சொல்வதுசரியல்ல என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 10—2—1982 ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்
எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*19. பொது நூலகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் ஒன்பதாவது அறிக்கை (ஏழாவது சட்ட மன்றப் பேரவை).

*20. பொதுத் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறவிருந்தினர் இல்லங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் பத்தாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை).